இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 23.06.2026

# இன்னும் ஏன் இந்தத் தேர்வு?

கடந்த மே 3 ஆம் தேதியன்று நீட் தேர்வு நடைபெற்றது. வினாத்தாள் கசிவு காரணமாக அந்தத் தேர்வு ரத்து செய்யப்பட்டது. மறுதேர்வு நேற்றைய தினம் (ஜூன் 21) நடைபெற்றது. மறுதேர்வு பதற்றம் காரணமாக இந்தியா முழுவதும் 20 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். இதில் நான்கு பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். தற்கொலையைத் தூண்டும் ஒரு தேர்வை இன்னமும் ஏன் நடத்துகிறீர்கள்?

கோவை மாணவி அனுகீர்த்தனா, நீட் தேர்வு எழுதத் தயாராகி வந்தார். பதற்றம் அதிகம் ஆகி தற்கொலை செய்து கொண்டுள்ளார். இவர் மே 3 நடைபெற்ற நீட் தேர்வையும் எழுதியவர்தான். ‘கடந்த முறை நன்றாக எழுதினேன். ஆனால் தேர்வு ரத்தாகி விட்டது’ என்று அவர் திரும்பத் திரும்பச் சொல்லி வந்துள்ளார்.

சேலம் கோபிகாவும் நீட் தேர்வு அச்சம் காரணமாக தற்கொலை செய்து கொண்டுள்ளார். இரண்டு முறை தேர்வு எழுதியும் நல்ல மதிப்பெண் கிடைக்கவில்லை என்ற வருத்தத்தில் இருந்துள்ளார் கோபிகா. தேர்வுக்குத் தயாராகி வந்தவர் திடீரென தற்கொலை செய்து கொண்டுள்ளார். ‘நல்ல மதிப்பெண் பெற முடியாவிட்டால் அரசு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காது’ என்று மகள் சொல்லி வந்ததாக அவரது அப்பா சொல்கிறார்.

பாலக்கோடு எண்டப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த ரோஷினி தற்கொலை செய்து கொண்டுள்ளார். நீட் தேர்வு எழுதத் தயாராகி வந்தவர் தற்கொலை செய்து விட்டார்.

தர்மபுரி மாவட்டம் பாகலூர் வெற்றியானந்தம் என்ற மாணவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார். ஏற்கனவே மூன்று முறை தேர்வு எழுதியும் மருத்துவப் படிப்புக்கு இடம் கிடைக்கவில்லை. கடிதம் எழுதி வைத்துவிட்டு மரணத்தைத் தழுவி இருக்கிறார்.

இதே போல் இந்தியா முழுவதும் கடந்த ஒரு மாதத்தில் 20 மாணவ, மாணவியர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயது மாணவி அகாங்ஷா சதுர்வேதி உருக்கமான கடிதம் எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்துள்ளார்.

இவர் மத்தியப் பிரதேசத்தில் மோ கஞ்ச் மாவட்டத்தில் உள்ள மாகனியா கிராமத்தைச் சேர்ந்தவர். இவரின் தந்தை கிருஷ்ண குமார் சௌபே விவசாயி. மகளின் படிப்புக்காக கிசான் கிரெடிட் கார்டு கடன் மூலம் கிட்டத்தட்ட 3 லட்சம் ரூபாய் கடன் வாங்கியிருந்தார். தேர்வு ரத்தானதால் மனம் உடைந்து தனது அறையில் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டார். அவர் ஒரு கடிதமும் எழுதி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மாணவி தனது அப்பா அம்மாவைக் குறிப்பிட்டு, “உங்கள் மகள் நன்றாகப் படித்து மருத்துவர் ஆவாள் என்று மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தீர்கள். ஆனால் மீண்டும் ஒரு நீட் தேர்வை எழுத எனக்கு இப்போது தைரியம் இல்லை. என்னுடைய முதல் முயற்சியில் நான் நல்ல மதிப்பெண்கள் பெற்றேன். ஆனால் இப்போது மீண்டும் நான் சிறப்பான மதிப்பெண் பெறுவேன் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. என்னை மன்னித்து விடுங்கள். நான் எல்லாவற்றையும் பாழாக்கிவிட்டேன்” என்று உருக்கமாக எழுதியிருக்கிறார்.

இப்படி எத்தனையோ பேரின் வாழ்க்கையைச் சிதைத்து வருகிறது நீட் தேர்வு. ஒழுங்காக ஒரு தேர்வைக்கூட நடத்தத் தெரியாதா?

**இளங்கலை மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வு மே 3 - ஆம் தேதி நாடு முழுவதும் நடத்தப்பட்டது. 22.79 லட்சம் மாணவர்கள் இத்தேர்வை எழுதினார்கள். இந்தத் தேர்வையே தேசிய தேர்வு முகமை ரத்து செய்தது. கேள்வித்தாள் கசிந்து விட்டதாகச் சொல்லி ரத்து செய்வதாகச் சொன்னார்கள். 2016 முதல் ஒவ்வொரு ஆண்டும் இதுபோல ஏதாவது ஒரு பிரச்சினை இத்தேர்வில் நடப்பது வழக்கமானதுதான். ஆள்மாறாட்டம் செய்து தேர்வு எழுதுவது அதிகம் நடப்பதும் இந்தத் தேர்வில்தான். கேள்வித்தாள் லட்சக்கணக்கில் விற்பதும் இந்தத் தேர்வில்தான். சி.பி.ஐ. விசாரணை நடத்துவதும் இந்தத் தேர்வில்தான். மாணவர்கள், பெற்றோர்கள் கைதாகி இருப்பதும் இந்தத் தேர்வில்தான். இப்படி ஒரு தேர்வை எதற்காக நடத்த வேண்டும்?**

நீட் தேர்வு கேள்வித்தாள் கசிவு விவகாரத்தில் ராஜஸ்தானைச் சேர்ந்த பா.ஜ.க. இளைஞரணிச் செயலாளர் தினேஷ் பின்வாலும் அவரது சகோதரர் மன்கிலால் பின்வாலும் சி.பி.ஐ.யால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் குடும்பத்தில் கடந்த ஆண்டு மட்டும் நான்கு பேர் நீட் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றுள்ளார்கள். இந்த ஆண்டு தினேஷ் பின்வாலின் மகன் நீட் தேர்வு எழுதி இருக்கிறார். கேரளாவில் எம்.பி.பி.எஸ். படிக்கும் ராஜஸ்தான் மாணவருக்கு முதலில் இந்தக் கேள்வித்தாள் கிடைத்துள்ளது. அவர் மூலமாக ராஜஸ்தானுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2 முதல் 5 லட்சம் ரூபாய்க்கு இது விற்கப்பட்டுள்ளது. இப்படித்தான் ஒவ்வொரு முறையும் நடக்கும். அதற்காக தேர்வுகளை ரத்து செய்து கொண்டே போவீர்களா? யாரோ சிலர் செய்யும் தவறுக்காக லட்சக்கணக்கான மாணவர் உயிரோடு விளையாடுவதா?

**ஒரு தேர்வைக்கூட ஒழுங்காக, சர்ச்சைக்கு இடமில்லாத வகையில், புகார் வராத வகையில் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானால் நடத்த முடியவில்லை. தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. ‘தர்மேந்திர பிரதான் பதவி விலகும் வரை ஜந்தர் மந்தரை விட்டு வெளியேற மாட்டோம்’ என இளைஞர்கள் போராட்டம் தொடங்கி இருக்கிறார்கள்.**

நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் மூன்று முறை மசோதா நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவருக்கு அனுப்பி இருக்கிறோம். ஆனால் குடியரசுத் தலைவர் ஒப்புதல் தரவில்லை.

**ஒட்டுமொத்தமாக இந்தத் தேர்வு முறையையே ரத்து செய்தாக வேண்டும். மோசடித் தேர்வுக்கு முதலில் முற்றுப்புள்ளி வையுங்கள்.**

## நாடு முழுவதும் ‘நீட்’ மறுதேர்வு! அச்சத்தால்
# 75 சதவீத மாணவர்கள் மட்டுமே பங்கேற்பு!

புதுடெல்லி, ஜூன் 23 –

நாடு முழுவதும் நேற்று முன்தினம் நடைபெற்ற நீட் மறுதேர்வில், 75 சதவீத மாணவர்கள் மட்டுமே பங்கேற்றுள்ளனர். மன அழுத்தம், நிச்சயமற்ற தன்மை மற்றும் அச்சம் காரண மாக பல மாணவர்கள் நீட் மறுதேர்வில் பங்கேற்கவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவுத் தேர்வு கடந்த மே 3ம் தேதி நடைபெற்றது. இதில், நாடு முழுவதும் சுமார் 22 லட்சத்து 79 ஆயிரம் பேரும், தமிழ்நாட்டில் 1லட்சத்து 42 ஆயிரம் பேரும் எழுதினர். ஆனால், வினாத்தாள் கசிவு உள்ளிட்ட முறைகேடுகள் காரணமாக, அந்த தேர்வு ரத்து செய்யப்பட்டது. தொடர்ந்து, நாடு முழுவதும் நேற்று நீட் மறுதேர்வு நடைபெற்றது. இதில் நாடு முழுவதும் 22 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இந்நிலையில், தமிழ்நாட்டில், கடந்த மே 3ம் தேதி நடைபெற்ற நீட் தேர்வில் 95 சதவீத மாணவர்கள் எழுதிய நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற நீட் மறு தேர்வில் 75 சதவீத மாணவர்கள் மட்டுமே பங்கேற்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், மதுரை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் சராசரியாக 75 சதவீத மாணவர்கள் மட்டுமே நீட் மறுதேர்வில் பங்கேற்றுள்ளனர்.

மன அழுத்தம் மற்றும் நிச்சயமற்ற தன்மை காரணமாக மீண்டும் தேர்வு எழுதத் தயங்கியது உள்ளிட்ட காரணங்களால், 25 சதவீத மாணவர்கள் நீட் மறுதேர்வில் பங்கேற்கவில்லை என கூறப்படுகிறது. மேலும், மே 3ம் தேதி நடைபெற்ற தேர்வைவிட, நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்வு சற்று கடினமாக இருந்ததாக மாணவர்களும், பயிற்சி மைய பிரதிநிதிகளும் தெரிவித்தனர்.

இதற்கிடையே, தமிழ்நாட்டில் நீட் தேர்வு அச்சம் காரணமாக கடந்த ஒரு வாரத்தில், ஒரு மாணவர் உள்பட 4 பேர் தற்கொலை செய்துகொண்டனர்.

மேலும், கடந்த ஒரு மாதத்தில் மட்டும் நீட் தேர்வு அச்சம் காரணமாக, நாடு முழுவதும் ஒரே மாதத்தில் 18 மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டனர்.

# முதலமைச்சர் ஜோசப் விஜய் பிறந்தநாள்!
## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஜூன் 23 -**

**முதலமைச்சர் ஜோசப் விஜய் பிறந்தநாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது:-

**தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்களுக்கு எனது பிறந்தநாள் வாழ்த்துகள்!**

**தாங்கள் மகிழ்ச்சியோடும், உடல் - உள நலத்தோடும் பொதுவாழ்வில் பணியாற்றிட விழைகிறேன்.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு முதல்வர் ஜோசப் விஜய் நன்றி!

தம்முடைய பிறந்தநாளையொட்டி தி.மு.கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்திக்கு முதலமைச்சர் ஜோசப் விஜய் நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார்.

## இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிப்போருக்கு
# ‘திராவிட மாடல்’ ஆட்சியில் எண்ணற்ற மேம்பாட்டுத் திட்டங்கள்!
### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்! தற்போதைய அரசும் அவைகளைத் தொடர வலியுறுத்தல்!

**சென்னை, ஜூன் 23 -**

**இலங்கைத் தமிழர் மறுவாழ்வு இல்லங்களில் வசிக்கும் மக்களுக்கு திராவிட மாடல் ஆட்சியில் எண்ணற்ற மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதாகவும் அவைகளை தற்போதைய அரசும் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**



பத்திரிகையாளர் ஆர்.கே. ராதாகிருஷ்ணன் இயக்கிய FacelessPeople என்ற ஆவணப் படத்தை பார்த்தபின் அவர் தமது சமூக வலை தளப் பக்கத்தில் பின்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் துயர் குறித்து 20 ஆண்டுகளுக்கும் மேல் பத்திரிகையுலகில் எழுதிவந்த அன்புக்குரிய ஆர்.கே. ராதாகிருஷ்ணன் அவர்கள், 30 ஆண்டுகளுக்கும் மேலாக மறுவாழ்வு முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழரின் வாழ்க்கை குறித்து Faceless People எனும் ஆவணப் படத்தை இயக்கியுள்ளார்.

அதனைப் பார்த்தேன்; நெகிழ்ந்தேன்!

இலங்கைத் தமிழர்களுக்கான இந்தியக் குடியுரிமையைத் தெளிவாக வலியுறுத்தும் இந்த ஆவணப்படத்தை உணர்வுடனும், பொறுப்புடனும் இயக்கிய ஆர்.கே. அவர்களுக்கு பாராட்டுகள்! வாழ்த்துகள்!

திராவிட மாடல் ஆட்சியில், முகாம் வாழ் தமிழர்கள் நலன் காக்க:

மறுவாழ்வு முகாம் எனப் பெயர் மாற்றம்

7 ஆயிரத்துக்கும் அதிகமான புதிய வீடுகள்,

மாதாந்திர பணக்கொடை, துணிமணிகள், பாத்திரங்கள்,

கல்வி உதவித்தொகை, வேலைவாய்ப்பு முகாம், திறன் மேம்பாட்டுப் பயிற்சி உள்ளிட்ட வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தினோம்.

அதுமட்டுமின்றி, அவர்களது வாழ்வுரிமைக்கான நீண்ட காலத் தீர்வு குறித்து நாடாளுமன்றத்தில் தி.மு.க. எம்.பி.க்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இலங்கைத் தமிழர்களுக்கான இந்தியக் குடியுரிமை குறித்த சட்டப்பூர்வ உரிமைகளை வலியுறுத்தி தி.மு.க. சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டுள்ளது.

நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த போது, மறுவாழ்வு முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்குவது தொடர்பாக 11.01.2026 அன்று பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதி வலியுறுத்தினேன்.

தி.மு.க. ஆட்சியில் சட்ட உதவிகள் மூலம் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் 10 பேர் நீதிமன்றத் தீர்ப்பினைப் பெற்று, இந்திய குடிமக்களானதுடன், கடந்த சட்டமன்றத் தேர்தலில் வாக்களித்து தங்கள் ஜனநாயகக் கடமையையும் நிறைவேற்றியுள்ளனர்.

குடியுரிமை பெறத் தகுதி உள்ள ஏறத்தாழ 25 ஆயிரம் இலங்கைத் தமிழர்களுக்காகத் தி.மு.க எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து குரல் எழுப்புவார்கள்.

தற்போதைய அரசும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் மக்களுக்காகத் திராவிட மாடல் அரசு மேற்கொண்ட திட்டங்களைத் தொய்வின்றித் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## தொழிலாளர் பாதுகாப்பே மாநில வளர்ச்சியின் அடித்தளம்:
# திருவள்ளூர் விபத்து காட்டும் கூட்டுப் பொறுப்பிற்கான பாடம்!
### மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

*சென்னை, ஜூன் 23 -*

*மனிதநேய மக்கள் கட்சி தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

திருவள்ளூர் தொழிற்சாலை வாயு கசிவு விபத்தில் சிக்கிய எளிய தொழிலாளர்களின் நிலை ஆழ்ந்த கவலையளிக்கிறது.



விபத்து நடந்த சில மணி நேரங்களிலேயே தேசிய பேரிடர் மீட்புப் படை (NDRF), தீயணைப்புத்துறை, மாவட்ட நிர்வாகம் மற்றும் சுகாதாரத் துறை ஆகிய பல்துறை அரசு அமைப்புகள் போர்க்கால அடிப்படையில் களமிறங்கி, நச்சு வாயுவை கட்டுப்படுத்திய விதம் மற்றும் மருத்துவ உதவிகளை முடுக்கி விட்ட வேகம் மிகவும் பாராட்டுக்குரியது.

இருப்பினும், மீட்புப் பணிகளில் அரசுத் துறைகள் காட்டும் இதே “துரித வேகம்” ஏன் விபத்துகளைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் இல்லை?

தமிழ்நாட்டை உலகளாவிய உற்பத்தி மையமாக மாற்ற நாம் இலக்கு நிர்ணயித்துள்ள சூழலில், இதுபோன்ற விபத்துகள் நமது தொழில்துறை வளர்ச்சியை (Industrial Growth) கடுமையாக முடக்கும். பாதுகாப்பற்ற சூழல் நிலவினால், சர்வதேச முதலீடுகள் குறைவதோடு மாநிலத்தின் நம்பகத்தன்மையும் கேள்விக் குறியாகும்.

பொருளாதார வளர்ச்சி என்பது தொழிலாளர்களின் உயிரைப் பலி கொடுத்துப் பெறுவது அல்ல.

பல்துறை மற்றும் சமூக அமைப்புகளை உள்ளடக்கிய 4 கட்டாயக் கொள்கை வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

சமூக அமைப்புகளை ஒருங்கிணைத்தல்பேரிடர் காலங்களில் உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய ஒரு கூட்டுப் பாதுகாப்பு வலையமைப்பை அரசு உருவாக்க வேண்டும். இவர்களுக்கு இரசாயன விபத்து கால முதலுதவி மற்றும் வெளியேற்ற முறைகளில் (Evacuation) முறையான பயிற்சி அளித்து, அரசு அமைப்புகளோடு இணைக்க வேண்டும்.

பல்துறை கூட்டுப் பணிக்குழு (MultiAgency Task Force): தொழிலக பாதுகாப்பு (DISH), மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (TNPCB), தீயணைப்புத் துறை மற்றும் சமூகப் பிரதிநிதிகளை ஒருங்கிணைத்து, ரசாயன ஆலைகளில் 3 மாதங்களுக்கு ஒருமுறை கட்டாயக் கூட்டுப் பாதுகாப்புத் தணிக்கை நடத்தப்பட வேண்டும்.

தானியங்கி டிஜிட்டல் கண்காணிப்பு: அபாயகரமான வாயுக்களைப் பயன்படுத்தும் ஆலைகளில், மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்துடன் இணைக்கப்பட்ட ‘தானியங்கி வாயு உணர் கருவிகள்’ (Automated Sensors) 24 மணி நேரமும் செயல்படுவதைச் சட்டப்பூர்வமாக்க வேண்டும்.

கடுமையான பொறுப்புக்கூறல் (Strict Accountability): தற்போது அமைக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவின் அறிக்கை அடிப்படையில், தவறிழைத்த நிர்வாகத்தின் மீது கால தாமதமின்றி கடுமையான குற்றவியல் நடவடிக்கை பாய வேண்டும்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தகுந்த நிவாரணமும், மறுவாழ்வும் வழங்கப்பட வேண்டும். தொழில்துறை பாதுகாப்பில் சர்வதேச தரத்தை எட்ட, மக்கள் அமைப்புகளையும் உள்ளடக்கிய புதிய கொள்கை மாற்றங்களை அரசு உடனே அமல்படுத்த வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா தெரிவித்துள்ளார்.